**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

## <u>அ.வ.எண். 258/2013</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு ஜூலை மாதம் 18-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 18.07.2023**

**பெயர் - கோவிந்தசாமி**

**த/பெ - அல்லா**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 03.29 p.m.**

**<u>குறுக்கு விசாரணை</u> -**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் முதலாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஏதேனும் வேலை செய்கிறேனா என்றால் விவசாயம் செய்கிறேன். எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 4 ஏக்கர் சொந்தமாக உள்ளது. இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரம் பதிவு செய்துதரக்கோரி தாக்கல் செய்துள்ளேன். அங்கமுத்துவும் சுந்தரமும் ஒரே ஊர் காரர்கள் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதிகள் எனது உறவுக்காரர்களா என்றால் இல்லை. கிரைய ஒப்பந்தம் ஏற்ப்படுத்தப்பட்ட புல எண் என்னவென்றால் 295/2 ஆகும். அதன் விஸ்தீரணம் 61 சென்ட் ஆகும். எவ்வளவு ரூபாய்க்கு கிரைய ஒப்பந்தம் போட்டேன் என்றால் ஒரு சென்டிற்கு ரூபாய் 1000/- வீதம் ரூபாய் 60,000/- கொடுத்துள்ளேன் பத்திரம் பதிவு செய்யும் போது ரூபாய் 1000/- கொடுப்பதாக தெரிவித்திருந்தேன். பணம் நான் ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ஆமாம்.

2. வாசா ஆ 1 ஆன கிரைய ஒப்பந்தம் பக்கம் 2ல் மேற்படி கிரைய பாக்கி தொகையை தாங்கள் 6 மாத்திற்குள் கட்ட தவறினால் தாங்கள் கொடுத்த முன் பணத்தை இழந்துவிடவேண்டியது என உள்ளது என்றால் மேற்படி பத்திரத்தை பதிவு செய்யும் அன்றும் தான் மீதம் உள்ள ரூபாய் 1000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டேன். வாசா ஆ 1ஆன கிரைய ஒப்பந்தத்தின் படி அவ்வாறு இல்லை என்றும் 14.10.2010 க்குள் நான் மீதம் உள்ள தொகையை

செலுத்த வேண்டும் என்றே உள்ளது என்றும் மேற்படி 6 மாத காலத்திற்குள் நான் பத்திரம் செய்து தரக்கோரி பிரதிவாதிகளை கேட்டேனா என்றால் பல முறை கேட்டேன் உடல்நிலை சரியில்லை என கோரி காலம் கடத்தினர். வாசா ஆ 1ல் எனது கையொப்பம் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணத்தின் படி இரு பார்டிகளும் சம்மதித்து எழுதிக்கொண்ட பத்திரமாக வாசா ஆ 1 இருக்கும் நிலையில் அதில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எனவே வாசா ஆ 1 செல்லாது என்றால் சரியல்ல.

3. கிரையம் ஒப்பந்தத்தின் போது வழக்கு சொத்தின் அசல் மூல ஆவணங்களை என்னிடம் ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. வாசா ஆ 1ன் படி அசல் ஆவணங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது பிரமான வாக்குமூலம் 2வது பக்கத்தில் 3வது பத்தியில் கிரைய தொகையில் மீதி தொகையான ரூபாய் 1000/- கொடுத்து கிரைய பத்திரம் செய்து கொள்ளப்பட்டதாகவும் மேலும் அன்றைய தினமே வழக்கு சொத்தின் அனுபவமும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகவும் அன்றில் இருந்து நான் மேற்படி சொத்தின் அனுபவத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறுதலாக கூறப்பட்டுள்ளது. நான் என்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. 28.02.2013 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றும் அதிலும் ரூபாய் 1000/- கிரைய தொகை செலுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு காலதோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை. நான் கூறுவது தவறு என்றும் முதல் பிரதிவாதி 08.03.2013 அன்றே பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றும் மேற்படி பதில் அறிவிப்பில் நான் கூறுவது போல் கிரைய ஒப்பந்தம் போடப்படவில்லை என்றும் எந்த கிரைய தொகையும் அவர் வாங்கவில்லை என்றும் நான் அவருக்கு மீதம் கிரைய தொகை கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது. நான் நானாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் அதனால் அது அவரை கட்டுப்படுத்தாது என்றும் முதல் பிரதிவாதி தெரிவித்தால் அது சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் இன்றளவில் முதல் பிரதிவாதிதான் உள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் பயிர் செய்து வருகிறேன்.

5. நான் மேற்படி சொத்தின் சுவாதீணத்தில் உள்ளதற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் ஒரே கிராமம் என்றும் ஊரில் எங்களுக்குள் இருக்கும் சிறு சிறு பிரச்சணைகள் காரணமாக முதல் பிரதிவாதியின் சொத்தை அபகறிக்க போலியாக ஆவணம் தயார் செய்து போலியாக வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லதக்கதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 03.48 p.m.**